# லதாகி (Ladakhi)

**வசிப்பிடம்:** இண்டியன் மிஷன் அசோசியேசனின்படி 1,00,000 ற்கும் மேலான லதாகிகள் இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் வசிக்கின்றனர். இவர்கள் வரலாற்றுக்குரிய லதாக்கின் தலைநகரமான லேயைச் (Leh) சுற்றி மிகப்பரந்த பகுதியில் 250 கிராமங்களில் வசிக்கின்றனர். இத்தோடுகூடச் சில ஆயிரங்கள் எல்லையைக் கடந்து மேற்கு திபெத்தில் வசிப்பதாகக் கூறப்படுகிறது. கி.பி.1950 ற்கு முன் எல்லா லதாகிகளும் இந்தியாவில் வசித்தனர். கி.பி.1950 மற்றும் கி.பி.1960 களில் வட லதாக்கை சீனர்கள் தாக்கி இமயமலையின் அக்சாய் சின்(Aksai Chin) பகுதியின் 38,000 சதுர கிலோமீட்டர்களை இணைத்துக்கொண்டனர். அக்சாய் சின் பகுதி மிகவும் தூரத்திலும் தொடர்பற்ற நிலையிலும் உள்ளதால் சீனர்கள் அப்பகுதியில் சாலை அமைத்து இரண்டு வருடங்கள் கழியும்வரை இந்திய அரசாங்கம் அதை அறியவில்லை. இதன் விளைவாக ஒரு பகுதி லதாகிகள் திடீரென்று தாங்கள் சீனாவிற்குள் வாழ்வதை அறிந்தனர். ஆனால் இந்த எல்லை மிகவும் பலவீனமாக உள்ளதால் இது இவர்களுக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை, இரு தேசங்களுக்கிடையில் இவர்கள் எளிதாகப் போக்குவரத்து செய்துவருகின்றனர்.




**அடையாளம்:** லதாகி ஒரு திபெத்திய இனமாகும் ஆனால் இவர்கள் குறிப்பிடத்தக்க அளவில் மொழி மற்றும் வரலாற்றில் திபெத்திய லதாகிகளிடத்திலிருந்து வித்தியாசமானவர்கள்.

**மொழி:** லதாகி மொழி மத்திய திபெத்திய மொழியோடு 30 லிருந்து 40 சதவீதம்வரை மட்டுமே ஒத்துப்போகிறது.

**பழக்கவழக்கங்கள்:** லதாகிகளுடைய வாழ்க்கை கடினமானது. உலகிலேயே மிக உயரமான மலைகளில் மறைந்துள்ள இப்பகுதி மிகக்குறைந்த மழையையே காண்கிறது - வருடத்தில் 10 செ.மீ. மட்டுமே. விவசாயிகள் பனி கரைவதால் உண்டாகும் தண்ணீரையே நம்பியிருக்கின்றனர். லதாகிகளின் நம்பிக்கையின்படி நரகம் நடுநடுங்கவைக்கும் கொடூரமான குளிர் நிலவும் இடமாகும். எப்பொழுதும் வெதுவெதுப்பான பருவநிலைக்காக ஏங்குகின்ற மக்கள் மத்தியில் இந்நம்பிக்கை நிலவுவதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

**வரலாறு:** லதாக்கின் தலைநகரமாகிய லே ஓராயிரம் வருடங்கள்வரை ஒரு சுதந்திரமான முடியாட்சியாக இருந்தது. லதாக்கினுடைய ராஜ குடும்பம் இந்நாள்வரை உள்ளது ஆனால் அவர்களின் ஆதிக்கம் இந்தியாவின் சுதந்திரத்திற்குப்பின் பெயரளவில் மட்டுமே உள்ளது. லதாகி ராஜ குடும்பம் தாங்கள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்ததாகப் புராணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் நயத்ரி சன்பொ (Nyatri Tsanpo) வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் எனக்கூறுகின்றனர்.

**மதம்:** இவர்கள் மற்ற திபெத்தியர்களைப்போலவே திபெத்திய புத்தமதத்தைப் பின்பற்றுகின்றனர். ஆயிரவருடங்களாகப் பொன் மதத்தின் கொடூரமான பூதங்கள்மேல் வைக்கும் நம்பிக்கை புத்தமதத்தோடு கலந்து இவர்களின் கோட்டையாக இருந்துவருகிறது. இவர்களுடைய பண்டிகைகளில் பயன்படுத்தப்படும் பூத முகமூடி மற்றும் மறுபடியும் வழக்கத்திற்குள் நுழைந்துகொண்டிருக்கும் மனித பலி ஆகியவை கடந்தகால இருளின் ஆதிக்கத்தின் அடையாளங்களாகும்.

**கிறிஸ்துவம்:** லதாகி மக்கள் மத்தியில் கிறிஸ்துவைப்பற்றிய முதல் சாட்சி நெஸ்டாரியஸ் (Nestorias) கொள்கையைப் பின்பற்றும் வணிகர்கள் மூலமாக எட்டாம் நூற்றாண்டில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடும். ஜார்ஜியன் ஓர்தொடக்ஸ் சர்ச்சின் சிலுவை சின்னங்கள் (Grapevine Cross) லதாகி பகுதிகளில் உள்ள கற்பாறைகளில் பொறிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கி.பி. 1642 ல் கத்தோலிக்கப்பாதிரியார் அன்டொனியொ டி அன்ட்ராடி (Antonio De Andrade) இன்றைய நாட்களில் சந்தா (Zanda) என அறியப்படும் இடத்தில் ஒரு பணித் தளத்தை நிறுவினார். குறுகிய காலத்திலேயே லதாகின் ராஜா அதை அழித்து நாசமாக்கினார். மொராவியர்கள் கி.பி. 1856 ல் லதாகிகள் மத்தியில் பணியைத் தொடங்கினர், கி.பி. 1922 ல் 158 பேர் இரட்சிக்கப்பட்டிருந்தனர். இந்த மிஷனெரிகள் இவ்வாறு கூறினார்கள் “கிறிஸ்துவப் பணிக்குக் கடுமையான விரோதங்கள் ஏதுமில்லை. மக்கள் மருந்து, கல்வி, வேதாகமம் மற்றும் மதக் கைப்பிரதி போன்ற எவற்றைக் கொடுத்தாலும் மிகவும் ஆர்வத்தோடு வாங்கிக்கொள்கின்றனர்.” மொராவியர்கள் இன்றும் லதாக்கில் பணிசெய்துவருகின்றனர். இந்நாட்களில் இவர்களோடு சில இந்திய மிஷன் நிறுவனங்களும் இணைந்துகொண்டுள்ளன.




**Population:**
109,700 (2000)
128,000 (2010)
149,500 (2020)
**Countries:** India, China
**Buddhism:** Tibetan
**Christians:** 220

**மேலோட்டம்:**

**மற்ற பெயர்கள்:** Lodokhi, Ladakh, Ladaphi, Ladhakhi, Lodak, Ladwags, Ladak

**மக்கள்தொகை:** 102,000 in India (1997, India Missions Association); 2,445 in China (1995, Global Evangelization Movement))

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, மேற்கு திபெத்திய, லதாகி மொழி

**மொழி வழக்குகள்:** 2 (Leh [Central Ladakhi], Shamma [Lower Ladakhi])

**திபெத்திய புத்தமதம்:** 80%

**கிறிஸ்துவம்:** 0.2%

**வேதாகமம்:** சில பகுதிகள்(கி.பி. 1904)

**இயேசு திரைப்படம்:** உண்டு

**சுவிசேஷஒலிப்பதிவுகள்:** Ladakhi

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : LBJ

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்